**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் நாள்,**
**CC. 39/2016**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 13.03.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜா (எ) லட்சுமணன் | வயது | : | 52 |
| த.பெ | : | திரு. ராமலிங்கம் | நிலை | : | **PW-3 (LW-2)** |

**Accused called absent. Defence counsel filed petition u/s.317 - Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை -**

1) நான் தற்போது பெரியப்பட்டு, மேட்டுத்தெருவில் வசிக்கிறேன். பெரியப்பட்டு மெயின்ரோட்டில் ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிகிறேன். எதிரியை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் (கு.வி.மு.ச 317-ன் மனுவின் அடிப்படையில் எதிரி வருகையின்மை அனுமதிக்கப்பட்டுள்ளது). இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன திருமாளவவன் என்பவரை தெரியும். கடந்த 2016-ஆம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் மதியம் சுமார் 3 மணிக்குமேல் ஆட்டோ ஸ்டேன்டில் நின்றுக்கொண்டிருந்தபோது எங்களை தாண்டி சென்ற இருசக்கர வாகனம் பரணி பள்ளியின் மெயின்கேட் எதிரே டமால் என்று சத்தம் கேட்டது ஓடி சென்று பார்த்தபோது செம்மன்னை ஏற்றிவந்த லாரி இரு சக்கர வாகனத்தில் மோதி நின்றது.

2) இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்தவரின்மீது லாரியின் டையர் ஏறி அவரது மூளை தனியாக கிடந்து துடித்தது, அதை நான் நேரடியாக பார்த்தேன். மேற்படி விபத்து சம்மந்தமாக காவல் துறைக்கு தகவல் சொன்னோம். லாரி சிதம்பரம் நோக்கி வந்தது இரு சக்கர வாகனம் கடலூரை நோக்கி இடது புறகமாக சென்றது. விபத்திற்கு பின்னர் இறந்தவரின் உடல் அவரது இடதுப்பக்க பள்ளத்தில் விழுந்து கிடந்தது. லாரியின் ஓட்டுநர் அதிவேகமாக வந்து இடதுபுறமாக வந்த இரு சக்கர வாகனத்தில் மோதியதால் விபத்து ஏற்பட்டது. சம்பவத்திற்கு பிறகு மறுநாள் போலிசார் என்னை விசாரித்தனர். விபத்து சம்மந்தப்பட் வாகனத்தின் பதிவு எண்கள் தற்போது ஞாபகமில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) என்னுயை சொந்த ஊர் பெரியப்பட்டு, மேட்டுத்தெரு. சுமார் 15 வருடங்களாக பெரியப்பட்டுவில் ஆட்டோ ஓட்டுநராக இருக்கிறேன். பெரியப்பட்டுவில் சுமார் 10 ஆட்டோக்கள் ஓடுகிறது. பெரியப்பட்டு பேருந்து நிறுத்தம் அருகில்தான் ஆட்டோ ஸ்டேன்ட் உள்ளது என்றால் சரிதான். வடக்கு தெற்கு சாலையில் பெரியப்பட்டு ஆட்டோ ஸ்டேன்ட் எந்த திசையில் உள்ளது என்றால் மேற்குப்பக்கமாக உள்ளது. சம்பவத்தின்போது ஆட்டோ ஸ்டேன்ட் அருகில் சுமார் எத்தனை பேர் இருந்தோம் என்றால் சுமார் 3 பேர் இருந்திருப்போம். ஆட்டோ ஸ்டேன்டில் எந்த வரிசைப்படி ஆட்டோவை நிறுத்துவோம் என்றால் யார் முதலில் வருகிறார்களோ அவர் முதலில் ஆட்டோவை நிறுத்துவார், பின்பு வருபவர்கள் அதன் வரிசைப்படி நிறுத்துவார்கள்.

2) வழக்கு சம்பவம் நடந்த நாளில் சவாரி சென்று வந்தேனா என்றால் சவாரி சென்று வந்தேன். சம்பவம் நடந்த இடம் எப்பொழுதும் கூட்டமாக இருக்கும் இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரத்தில் சம்பவ இடத்தில் சுமார் 50 -60 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் மதியம் நேரம் என்பதால் சுமார் 20 -30 நபர்கள் வரை இருந்திருப்பார்கள். பரணி பள்ளியிலிருந்து 20-30 மீட்டர் தூரத்தில் கிழக்குப்புற சாலையில் ஐயன்பேட்டை,கோபாலபுரம், ஆண்டாள் முள்ளிப்பள்ளம் போன்ற ஊர்களுக்கு பேருந்து செல்லக்கூடிய சாலை உள்ளது என்றால் சரிதான். சுற்றுப்புற கிராமங்களில் உள்ள மக்கள் எனக்கு நன்கு பரிட்சயம் உள்ளவர்கள் என்றால் சரிதான். சம்பவ காலத்தில் ஆட்டோவை எந்த திசையை நோக்கி நிறுத்தி இருந்தேன் என்றால் கிழக்கு திசையை நோக்கி நிறுத்தி இருந்தேன். சம்பவம் நடந்த நேரத்தில் எந்த திசையை நோக்கி யார் யாருடன் பேசிக் கொண்டிருந்தேன் என்றால் சம்பவம் நடந்து 10 வருடங்கள் ஆவதால் அது குறித்து தற்போது ஞாபகமில்லை. பெரியப்பட்டு ஆட்டோ ஸ்டேன்டில் உள்ளவர்கள் அனைவரும் அதே ஊரைச் சேர்ந்தவர்களா என்றால் இருவர்தவிர மற்ற அனைவரும் அதே ஊரைச் சேர்ந்தவர்கள்.

3) சம்பவம் நடந்த பிறகு சம்பவ இடத்தில் மொத்தம் எத்தனை பேர் கூடியிருப்பார்கள் என்றால் சுமார் 100 பேர் கூடியிருப்பார்கள் அந்த இடத்தில் போக்குவரத்து இல்லாமல் ஸ்தம்பித்துவிட்டது. சம்பவம் நடந்த பிறகு காவல் நிலையத்தில் தகவல் சொல்லி அதிகாரிகளை வரவழைத்தேனா என்றால் ஆமாம். அந்த சமயத்தில் போலிசார் என்னிடம் பெயர், முகவரி போன்றவற்றை வாங்கினார்களா என்றால் சம்பவம் நடந்த சமயத்தில் வாங்கவில்லை. வழக்கு விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, லாரி ஓட்டியவரின் கவனக்குறைவால்தான் விபத்து சம்பவம் நடந்தது. இரு சக்கர வாகனம் லாரியின் எந்த பகுதியில் மோதியிருந்தது என்றால் லாரியின் வலதுப்பக்கத்தில் மோதியிருந்தது. சம்பவத்திற்கு பிறகு லாரி எங்கு நின்றுக்கொண்டிருந்தது என்றால் சாலையின் வெள்ளை கோட்டின் நடுவிலிருந்து வலதுப்பக்கமாக ஏறி நின்றிருந்தது.

விபத்து ஏற்படுத்திய பிறகு இரு சக்கர வாகனத்தை தாண்டி சுமார் 20 அடி தூரம் சென்று லாரி நின்றது.

4) விபத்து நடந்த சாலையில் சம்பவ இடம் வளைவான பகுதி என்றால் சரிதான். விபத்து நடந்தபிறகு சாட்சி தமிழரசன் எங்கிருந்து வந்தார் என்றால் எங்களுடன்தான் இருந்தார். இருசக்கர வாகனம் எந்த ஊரை நோக்கி சென்றது என்றால் சிதம்பரத்திலிருந்து கடலூரை நோக்கி செல்லும் திசையில் சென்றது. வழக்கு விபத்தில் இறந்தவர் எனக்கு நன்கு பழக்கமானவரா என்றால் இல்லை அவரை பார்த்திருக்கிறேன். சம்பவம் நடந்த நாளில் யார் யார் ஆட்டோ ஓட்டினர் என்ற விவரம் ஆட்டோ ஸ்டேன்டில் உள்ள பலகையில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த பலகையில் சாட்சி தமிழரசனின் பெயர் எழுதப்பட்டிருந்ததா என்றால் எழுதப்பட்டிருந்தது. விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை அன்றே போலிசார் கைது செய்தனரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. விபத்து நடந்தவுடன் லாரி ஓட்டுநர் இறங்கி ஓடிவிட்டார், ஓட்டுநரை பார்க்கவில்லை. சம்பவம் நடந்த நேரத்தில் நான் சவாரி சென்றிருந்தேன் என்றாலும் சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் சாட்சி தமிழரசன் சம்பவ நேரத்தில் என்னுடன் இல்லையென்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பிறகு இறந்தவரின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் மற்றும் குறவன்மேடு கிராமத்தை சேர்ந்தவர்களுடன் மறுநாள் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை.இறந்தவர் எனக்கு நன்கு பழக்கமானவர் என்பதால் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஓம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**